# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## மலையாளிகளுக்கு எதிரான பௌத்த சிங்கள இனவாதம்

பகுதி II

17

பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்த யாழ்ப்பாண மேட்டுக்குடித் தலைவர்களது குறுகிய சமூகப் பார்வையும், மதம் சார்ந்த சாதி சார்ந்த அவர்களது அரசியல் கொள்கைகளும், தமிழீழ மக்களை பாதிப்பதற்கு நிர்க்கதியான நிலைக்கு தள்ளிவிடுவதற்கு நீண்ட காலம் எடுத்தது.

ஆனால் உடனடிப் பாதிப்பு என்பது மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத்தான் ஏற்பட்டது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முதன் முதலில் பௌத்த சிங்களவர்களை தூண்டிவிட்டவர் அநகாரிக தர்மபாலா. 1920 களிலேயே 'தென்னிந்தியாவின் கீழ் சாதியினர் எமது மூதாதையரின் மண்ணான எமது புனிதத் தீவில் வந்து குடியேற வெள்ளையர் அனுமதித்து விட்டனர். இவர்களின் வருகையால் எமது மண்ணின் புனிதம் கெட்டுப்போய் விட்டது' என்ற புனிதக் கோட்பாட்டை அவர் மலையகத் தமிழர்களுக்கு எதிரான பிரச்சார ஆயுதமாக முன்வைத்தார்.

அவரது காலத்தில் இருந்த ஏனைய சிங்களத் தலைவர்கள் அடிமைகள் இழிந்தவர்கள் என்ற அர்த்தத்தில் 'கூலிகள்' என்று அழைத்து மலையகத் தமிழரை இழிவு செய்தனர்.

தமிழர்களான இவர்கள் சிங்கள இனவாதிகளால் இழிவு செய்யப்பட்டதும் அவமதிக்கப்பட்டதும் அக்கால `Tamil' தலைவர்களுக்கு ஒரு பெரிய விடயமாகத் தெரியவில்லை. 'இழிசாதியினர்', 'கூலிகள்' என்ற சிங்கள இனவாதிகளின் கருத்து அவர்களுக்கு ஏற்புடையதாக இருந்தது. சிங்கள இனவாதிகளை விட இவர்கள் ஒரு படி மேலே சென்று 'வடக்கர்' என்ற பதத்தையும் சேர்த்துக் கொண்டனர்.

1830-களிலிருந்தே இந்தியத் தமிழர்கள் கொத்தடிமைகளாக மலையகத்து தோட்டங்களுக்கு கொண்டுவரப்பட்டபோதும் 1930 வரையில் சிங்கள மக்கள் மத்தியில் பெரிய அளவுக்கு அவர்களுக்கெதிரான இன உணர்வு உருவாகவில்லை.

அதற்குக் காரணம், அவர்கள் செய்த வேலையை சிங்கள விவசாயிகள் செய்யத் தயாராக இருக்கவில்லை. அக் காலகட்டத்தில் பெரும்பாலான கண்டிய விவசாயிகளுக்கு ஒரு சிறு துண்டு நிலமாவது இருந்தது. அவர்கள் அந்த நிலத்தில் விவசாயம் செய்து வாழ்வதற்கே விரும்பினார்கள். அது போல் நிலமில்லாதவர்களும், பிரித்தானியர்களது நில ஆக்கிரமிப்புச் சட்டங்களால் நிலத்தை இழந்தவர்களும் மலையகத்தின் கீழ் பகுதிகளிலிருந்த சிங்கள நிலப் பிரபுக்களின் நிலங்களில் வேலை செய்வதற்கே விரும்பினார்கள். வெள்ளையர்களுக்கு எதிரான வெறுப்புணர்வும் பௌத்த சிங்களத் தலைவர்களும், மதவாதிகளும் பரப்பியிருந்த 'கொயிகம' (கண்டிய உயர்சாதி) சாதிய வெறியும், சாதி குறைத் தமிழர்கள் செய்யும் தொழிலை புனித வம்சத்தில் வந்த ஆரியர்களான தாங்கள் செய்யக்கூடாது என்ற உணர்வை கண்டி சிங்கள விவசாயிகளுக்கு உருவாக்கியிருந்தன. அதாவது அவர்களது தலைவர்கள் வர்ணித்தபடி அவர்கள் கூலிகளாக மாற, 'தயாராக' இருக்கவில்லை.

ஆனால் 1929-ம் ஆண்டு தொடக்கம் 1931-ம் ஆண்டு வரை உலகில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களான இறப்பர் தேயிலை என்பவற்றின் விலைகள் அதிகளவுக்கு வீழ்ச்சியடைந்தன. இறக்குமதி செய்யப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரித்தன. இதனால் நாட்டிலிருந்த பல சிறிய தொழில் நிறுவனங்கள் மூடப்படும் நிலை உருவாகியது. பெரிய தொழில் நிறுவனங்கள் சம்பளக் குறைப்பு ஆட்குறைப்பு என்பவற்றைச் செய்தன. நாட்டில் மோசமான பஞ்சம் ஏற்பட்டது. வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் பல சிங்கள விவசாயிகள் தங்களது நிலங்களை அடமானம் வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத்தகைய சூழ்நிலைகளால், வேலையற்ற சிங்களவர்கள் முழுநேர வேலைக்கு உத்தரவாதம் பெற்றிருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பொறாமையுடன் பார்க்க ஆரம்பித்தனர்.

இந்தப் பொறாமை உணர்வை இனங்கண்டு கொண்ட பிரபல தொழிற்சங்கத் தலைவரான ஏ.ஈ.குணசிங்கா இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்புப் போராட்டமாக அதை திருப்பிவிட முனைந்தார்.

> 'சிங்கள மக்கள் மேய்ப்பன் இல்லாத மந்தைகள் போல் வாழுகின்றார்கள். சிங்கள இனத்தை (அழிவிலிருந்து) காக்க நற்பண்புகளும் தளரா உறுதியும் மிக்க மக்கள் குழுவும், நற்பண்பும் வீரமும் பொருந்திய வீரத் தலைவனுமே இன்றைய தேவையாகும். ஆரிய இனம் அழிவதைத் தடுக்கப் போராடும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஹிட்லர் போன்று அத் தலைவர் அமைய வேண்டும்'

தனது முன்னைய இடது சார்புடைய தொழிற்சங்கக் கொள்கைகளையெல்லாம் தூக்கி குப்பைக் கூடையில் போட்டு விட்டு அநகாரிக தர்மபாலாவின் பௌத்த சிங்கள மேலாண்மைக் கோட்பாடுகளை அவர் கையில் எடுத்துக் கொண்டார்.

மிகவும் தந்திரசாலியும், தொழிற்சங்கத்துறையில் நீண்டகால அனுபவத்தைப் பெற்றிருந்தவருமான அவர் 'கூலி'கள் என்று சிங்களத் தலைவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட மலையகத் தமிழ் தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களை உடனடியாக திரும்பி விட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, மலையாளத் தொழிலாளர்களுக்கு எதிரான உணர்வை முதலில் கிளப்பி விட்டார்.

1930-ம் ஆண்டு இலங்கையில் 30,000 மலையாளத் தொழிலாளர்கள் இருந்தனர். இவர்கள் முன்னைய திருவிதாங்கூர் சமஸ்தான பிரிவிலிருந்தும், கொச்சினிலிருந்தும் இலங்கைக்கு வந்திருந்தனர். பொதுவாக இவர்களை கொச்சிக்காரர்கள் என்றே அழைக்கும் வழக்கம் இருந்து வந்தது.

மலையாளத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலிருந்த தொழிற்சாலைகளிலும், துறைமுகத்திலும், புகையிரதப் பகுதியிலும் பணியாற்றினர். இன்னும் சிலர் ஐரோப்பியர்களினதும், உள்ளூர் முதலாளிகளினதும் வீடுகளில் வேலைக்காரர்களாகப் பணிபுரிந்தனர். ஒரு சிறு பகுதியினர் 'கள்' இறக்கும் தொழிலைச் செய்தனர். இவர்களை விட கேரளாவிலிருந்து வந்த நடுத்தர வர்க்கத்தினரும் சிறு முதலாளிகளும், 'சாயா கடை' (தேனீர்கடை) உரிமையாளர்களாகவும், உணவு விடுதி உரிமையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தனர்.

1934-ம் ஆண்டு இலங்கை முழுவதிலும் ஏற்பட்ட மலேரியா நோயின் தாக்கம் பிரச்சினையை இன்னும் பெரிதுபடுத்தியது. அந்த ஆண்டில் மட்டும் மலேரியா நோய்க்கு ஒரு இலட்சம் பேர் பலியாகினர்.

இயற்கை அனர்த்தங்களாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களுக்கு மலையாள இனத்தவர்களை பொறுப்பாளிகளாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சட்டசபையில் 'மலையாளிகளை' நாடுகடத்தி அவர்களது வேலைகளை சுதேசிகளுக்குக் கொடுக்கும்படி ஏ.ஈ.குணசிங்கா வாதிட்டார். மலையாளிகளுக்கு எதிரான இன உணர்வை அவர் இயக்க ரீதியாகவே நடத்தினார். மலையாளிகளுக்கு வீடு கொடுக்க வேண்டாம். குறைந்த ஊதியத்தில் வேலை செய்கின்றார்கள் என்பதற்காக சிங்கள முதலாளிகள் யாரும் மலையாளிகளுக்கு வேலை கொடுக்க வேண்டாம். மலையாளிகளின் கடைகளில் தேனீர் அருந்தவோ, உணவு உண்ணவே வேண்டாம், என்றெல்லாம் ஏ.ஈ. குணசிங்காவின் 'வீரியா' பத்திரிகை பச்சை இனவாதத்தை கக்கியது.

கெரில்லா பாணி முறையில் கொழும்பு நகரவீதிகளில் மலையாளிகள் மறைந்திருந்து தாக்கப்பட்டனர். அவர்கள் குடியிருந்த வீடுகள் நள்ளிரவுவேளைகளில் அடித்து நொருக்கப்பட்டன.

இவ்வாறு மலையாளிகளுக்கு எதிராக திட்டமிட்டு உருவாக்கி கட்டவிழ்த்து விடப்பட்ட பௌத்த சிங்கள இனவாதம், பிற்காலத்தில் தமிழர்கள் மீது பிரயோகிப்பதற்கான ஒரு ஒத்திகையே என்பதை அறிந்து கொள்ளும், அரசியல் சாணக்கியம் இல்லாத யாழ்ப்பாண `Tamil' தலைவர்கள், அதைக் 'கண்டு கொள்ளவே இல்லை.'

தென்னிலங்கையிலிருந்த இடதுசாரித் தலைவர்கள் இந்த பௌத்த சிங்கள இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக போராட முன் வந்த போதும், இவர்கள் வாய் மூடி மௌனிகளாகவே இருந்தனர்.

'வீரயா' பத்திரிகை இடதுசாரிகள் சிங்களவர்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள். சிங்கள இனத்தின் துரோகிகள் என்றெல்லாம் ஆசிரியர் தலையங்கம் தீட்டியபோதும் Tamil தலைவர்கள் விழித்துக் கொள்ளவேயில்லை.

1936-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி வெளிவந்த 'வீரயா' ஆசிரியர் தலையங்கத்தில் 'ஐயோ! பெருமையும், புகழும் வாய்ந்த எமது இனத்துக்கு, இந்தக் கொம்யூனிஸ்டுகள் செய்வது என்ன? சமசமாஜிஸ்டுக்களாலும், மலையாள வியாபாரிகளாலும் ஏழைச் சிங்கள மக்கள் பட்டினி கிடந்து சாக நேருகிறது. அவர்களுடைய உணவு அந்நியத்துக்குக் கிடைக்கிறது. கொம்யூனிஸ்டுக்களின் ஆதரவைப் பெற்ற மலையாளிகளுடன் ஏழைச் சிங்களவன் எப்படிப் போட்டிபோட முடியும்?' என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

1930-களில் மலையாளிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட இந்த பௌத்த சிங்கள இனவாதத்தை அதே காலப்பகுதியில் ஜேர்மனியிலும், இத்தாலியிலும் உருவாகியிருந்த ஹிட்லரினதும், முசோலியினதும் பாசிய வெறியோடு ஒப்பிடுகின்றார், பிரபல மாக்சிய அறிஞரான குமாரி ஜெயவர்த்தனா.

ஏ.ஈ.குணசிங்காவின் 'வீரயா' ஏட்டில் வெளிவந்த பல கடிதங்கள், கட்டுரைகளை அவர் இதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்.

1936 ஏப்ரல் 17-ல் வெளிவந்த வீரயா ஏட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதம் 'சிங்கள மக்கள் மேய்ப்பன் இல்லாத மந்தைகள் போல் வாழுகின்றார்கள். சிங்கள இனத்தை (அழிவிலிருந்து) காக்க நற்பண்புகளும் தளரா உறுதியும் மிக்க மக்கள் குழுவும், நற்பண்பும் வீரமும் பொருந்திய வீரத் தலைவனுமே இன்றைய தேவையாகும். ஆரிய இனம் அழிவதைத் தடுக்கப் போராடும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஹிட்லர் போன்று அத் தலைவர் அமைய வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறது.

கலப்புத் திருமணங்களும் தேசிய அபிவிருத்தியும் என்ற தலைப்பில் அதே திகதியில் வெளிவந்த 'வீரயா' ஏட்டில் பி. சிறிசேனா என்பவர் எழுதிய கடிதத்தில் 'ஜேர்மனியின் தலைவரான ஹிட்லர் ஆரியக் குருதி ஓடாத எவனிடமும் தலைமைப் பண்பைக் காண முடியாது என்று கூறினார். எனவே அவர் தனது நாட்டில் ஆரியரும், ஆரியர் அல்லாதவர்களும் மணம் புரிவதைத் தடுத்துள்ளார். ஆரியரல்லாதார் வீடுகளில் இளம் ஆரிய ஜேர்மன் பெண்களை வேலைக்கமர்த்துவது சட்டவிரோதமானதென ஹிட்லர் பிரகடனம் செய்தார். கலிபோர்ணியா, பேர்சியா போன்ற நாடுகளில் கூட அந்நியரை மணம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் நோக்கமெல்லாம் தூய ஆரிய இனத்தை உருவாக்குவதேயாகும்...'

'...சட்டபூர்வமாகவோ அல்லது களவாகவோ சிங்களப் பெண்களுக்கும் மலையாளிகளுக்குமிடையே நிகழும் மண உறவுகள் தடுக்கப்பட வேண்டும். அடிமைத்தனத்துக்கு வழி வகுக்கப்போகும் இந்நடைமுறையைத் தடுத்துவிட்டால், சிங்கள இனத்தின் இலட்சியத்தை அடையக்கூடிய நன்முயற்சியாக இது அமையும். எல்லாச் சிங்களவரும் இதனை ஆதரிப்பது அவர்களது கடமையாகும்' என்று ஹிட்லரின் ஆரியவாதமும், பௌத்த சிங்கள (இன) வாதமும் ஒன்றுதான் என்பதை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

- நக்கீரன்